உ

### பத்திரிகைக் கிரயம்.

| | இலங்கையிலுள்ள பிரவிடங்களுக்கும் ஆஸ்திரியாவுக்கும். | சிங்கப்பூர் முதலிய தொலைவாய் இராஜியத்திற்கு |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1 வருஷத்திற்கு 2-50 | 3-50 | 4-00 |
| 6 மாதத்திற்கு 1-50 | 2-00 | 2-25 |
| 3 ,, 0-80 | 1-10 | 1-40 |
| 1 ,, 0-30 | 0-40 | 0-45 |
| தனிப்பிரதிக்கு 0-08 | 0-10 | 0-12 |

### விளம்பர விகிதம்.

| முற்பணம். | 1 பத்தி. | ½ பத்தி. | ¼ பத்தி |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1 வருஷத்துக்கு | 50-00 | 30-00 | 17-50 |
| 6 மாதத்துக்கு | 30-00 | 17-50 | 10-00 |
| 3 ,, | 17-50 | 10-00 | 7-50 |
| 1 ,, | 12-00 | 7-00 | 5-00 |
| 1 முறைக்கு | 5-00 | 3-00 | 1-75. |

1 ,, 1 இஞ்சுக்கு சதம் 40. ஜனனம், விவாகம் மரணம், விசேஷம் ரூ. 1 அடுத்தமுறைகட்கு அரைப்பங்கு

# விஜய பானு.

# WIJAYA BHANOO.

ஆதிவாரந்தோறும் பிரசுரிக்கப்படும்.

Registered at the Ceylon G. P. O. as a News Paper.] "அஞ்சா நீதியே அழியா வாழ்வு." [தனிப்பிரதி விலை சதம் 8

புத்தகம் 1. | கொழும்பு, 1912 ஆ ஜனவரி மீ 7-உ ஞாயிற்றுக்கிழமை. | இலக்கம் 23

உ

சிவமயம்.

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன், ஞானகுரு வாணிபதம் காடு.

---

அங்கிங் கெனுதபடி யெங்கும் ப்ரகாசமா யானந்த பூர்த்தியாகி
பருளொடு நிறைந்ததெது தன்னருள்வெளிக் குளே யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும்படிக் கிச்சையைத் துயிர்க்குயிராய்த் தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம நின்றதெது சமயகோடிக ளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா யென்றைக்கு முள்ள தெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங் கருதியஞ்சலி செய்குவாம்.

என்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனுய் மாலாய்
ஆன்றவி சனுமாய்த் தானே யனந்தமூர்த்தி யுமாய் நிற்கும்
மூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனுய் நாளுந்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே.

---

## சச்சிதானந்தன்.

—:✲:—

(22-ம் இலக்கப் பத்திரிகைத்தொடர்)

### 10-ம் அத்தியாயம்.

### கமலாம்பாள்,

பரசகாயி பரமானந்தப் பிரபுவுக்குப் பெண்ணுடை தரிக்கையில் லோகாம்பாள் இரவு முழுதும் தம் கிரகத்தில் தங்குவாரென்றும், லோகாம்பாளின் காதலர் இரவு முழுதும் தாமங்கே சயனிப்பாரென்றும் சொன்னமையால் பரமானந்தன் லோகாம்பாள் பரசகாயியின் கிரகத்திலேயே காலை ஏழு மணி வரை அல்லது எட்டு மணி வரை நிற்பாரென்றும் மனத்தைரியமுடையவராயிருந்தார்.

இந்தப் பரமானந்தப்பிரபு பரசகாயியின் சாப்பிலிருந்து புறப்பட்டபின்னர், பரசகாயி தமது மேசையிலிருந்த மணியை யடித்தனர். அடிக்கவே, அவர் வேலைக்காரிகளுளொருவராயிருந்த இருபது வயதுப் பராயமுடைய அழகிய ஸ்திரி வந்தனர்.

வரவே, பரசகாயி, வந்த மாதை அரியே! என விளித்து, பிரதானகாரியங்கள் சிலவிருக்கின்றன. முதலாவது நித்தியானந்தன் இன்றிரவு லோகாம்பாளுடன் இங்கு தங்குவதாகச் சொன்னர். சரியாய் பத்து மணிக்குத் தமது இராச் சாப்பாட்டை அனுப்பும்படி கட்டளைபண்ணினர். சமயற்காரனைச் சாப்பாட்டை மிக நேர்த்தியாய்ப் பாகம் பண்ணும்படி சொல். அவன் பாகம்பண்ணியவுடன், மற்ற வேலைக்காரனை அறைவாயிலண்டை வரும்வரை கொண்டு வரும்படி கட்டளைபண்ணு. நீ அறையில் வாயலில் நின்று வாங்கி யாவையும் மேசையில் வைத்து அங்கு நின்று அவர்கள் தேவைப்படுவனவற்றைக் கொடுத்து மனச்சந்தோஷமடையும்படி செய். எனச் சொல்லி நானிப்போ சொன்னவை உனக்கு நன்கு விளங்குகின்றதாவென வினவினர்.

அரி—யாவும் நன்கு விளங்குகின்றது அம்மா.

பரசகாயி—அரியே! இதோ இந்தத் திறவுகோலைப்பிடி. நித்தியானந்தனும லோகாம்பாளுமிருக்கும் அறையுளுள்ள அலுமாரியில் சாவி இதுவே. இந்த அலுமாரியிலுள்ள கூசாவிலிருக்கும் குடிவகையை எடுத்து சாப்பிட மேசையிலுட்கார்ந்திருக்கையில் நித்தியானந்தனின் வலப்பக்கத்தில் வை நான் சொல்வது விளங்குகின்றதா?

அரி—நன்கு தெரிகின்றது அம்மா இன்னும் வேறேதாவது கட்டளைகளிருந்தால் கற்பியுங்கள்.

பரசகாயி—ஆம், நித்தியானந்தன் இதோ இருக்கும் கடிதத்தை மீனவனுக்கு இன்று இரவு கிடைக்கக்கூடியதாயனுப்பும்படி கட்டளையிட்டார். இதை நீ கொண்டுபோய் வேலைக்காரனிடம் கொடுத்து சோமன்வீதியிலிருக்கும் மீனவனிடத்தில் கொடுக்கும்படி செய்.

அரி—ஆம் அம்மா அப்படியே செய்கிறேன்.

பரசகாயி—அரியே! இப்பொழுது நான் கமலாம்பாளுடன் போக ஆயத்தமாயிருக்கிறேன் எனவும், எனது சால்வையை அவளையே எடுத்துக்கொண்டு வரும்படியும் சொல். அத்துடன் வண்டியொன்றும் கொண்டுவர வேலைக்காரனுக்குக் கட்டளைபண்ணு.

அரி—சாப்புவாசலுக்கா அம்மா?

பரசகாயி—ஆம், நான் எப்போவாவது ஜேம்ஸ் வீதி வழியாய்ப் போவது உனக்குத் தெரியுமா?

அரி—அம்மா! மன்னிக்கும்படி வேண்டுகின்றேன். வண்டி யார்க்கென்பது தெரியாமையால் அவ்விதம் வினவினேன்.

இவ்விதம் அரியென்னும் வேலைக்காரி சொல்லி அறையை விட்டுப் போயினள்.

இந்த அரி என்பவள் போய் மூன்று நாலு நிமிஷத்தில் பதினறு வயதுப் பராயமுள்ள மிகவழகிய பெண் வந்தனள். இவள் அம்புபோலும் விழியையும், மான்போல மருண்ட பார்வையும், முத்துப்போல ஒளிரும் வரிசையான பற்களையும், கரும்பட்டுப்போல ஒளிரும் கூந்தலையும் உடையவள். இவள் வளர்ச்சியில் கட்டையானவளாயிருந்தபோதிலும், உயரத்துக்குத் தக்க பருமனையுமுடையவளாயிருந்தாள். அவளணிந்திருந்த அங்கியின் கீழ் அவள் பாத அழகைப்பார்த்தார் இவளில் மயங்காது போகார். ஆனல் அவளது அழகிய வதனத்தில் துக்க மேகம் பரந்ததாகவிருக்கது. இவளே நாம் முன் கூறிய கமலாம்பாள். இந்தக் கமலாம்பாள் பரசகாயியின் சால்வையைக் கொண்டுவந்து அவருக்குக் கொடுத்தனள். பரசகாயி சால்வையைத் தாவணியாய்ப் போட்டுக்கொண்டு புறப்படவெத்தனிக்கையில், அரி என்பவள் முன் தோற்றி வண்டி வந்திருக்கின்றதெனக் கூறினள்.

பரசகாயி—எனது அன்பார்ந்த கமலாம்பாளே! நீர் உபக்குத் தேவையான பொருள்கள் யாவையும் எடுத்துக்கொண்டீரா?

கமலாம்பாள், ஆம் எனக்கூறித் தனது கண்களிலிருந்தும் வடியும் கண்ணீரை மறைக்கும் நோக்கமாய் மறுபக்கந் திருப்பினள். இந்தப்பெண் அவ்விதம் கண் கலக்கமடைந்தது தாம் சென்ற இரண்டு வருஷக்காலமாய் இருந்த வீட்டிலிருந்து புறப்படவேண்டி நேரிட்டதினுலும், தாம் வெளியே போக நேரிட்ட காரியத்தைக் குறித்து ஞாபகத்துக்கு வந்ததினுலுமாம்.

இந்தப் பாலிய ஸ்திரீயின் கண்களிலிருந்து நீர் அருவிபோல் பாய்வதைக் கண்டு பரசகாயி, கமலாம்பாளே! உன் கண்களிலிருந்து வடியும் நீரைத்துடை. நீ இப்போ போகுமிடத்தில் உனக்கு வேண்டிய சகல வசதிகளுமுண்டு. எனக்கு நேரம் கிடைக்கும் வேளைகளில் யான் அடிக்கடி உன்னை வந்து பார்ப்பேன், இங்ஙனமன்றி உனது சொந்தச்செலவுக்காய்ப் பெருந்தொகைப்பணத்தையும் உன்னிடம் கொடுத்துவிட்டே திரும்புவேன் என்றுள்.

சொல்லவே, கமலாம்பாள் விம்மியழுது, எனதன்பார்ந்த அம்மணி! பணத்தால் பெறக்கூடாத ஒரு காரியம்மாத்திரமிருக்கின்றதென்றனள்.

பரசகாயி—கமலாம்பாளே! உலகிலுள்ள எல்லாவித இன்பமும் பணத்தாலாகும். நீ உன் மனதைத் துக்கத்திலாழ விடுவது சரியல்ல.

கமலாம்பாள்—அம்மணி! பணம் மனச்சமாதானத்தை யுண்டுபண்ணவும்மாட்டாது, அணுப்பிலழிந்துபோன மானம் ஆயிரம் பொன்கொடுத்தாலும் வரவும்மாட்டாது.

பரசகாயி—நீ இப்போ பேசுவது சிறுபிள்ளைத்தனம். நான் எக்காலும் உனது அன்பியாயிருப்பேனென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்,

கமலாம்பாள்—நானிவ்விதம் துக்கமடைந்ததை, அம்மணி! மன்னிக்கும்படி வேண்டுகின்றேன், நானே ஓர் அனதை, நீர் மாத்திரமே எனது சினேகிதியென யானறிவேன். நானிப்பொழுது துக்கமென்பதை யகற்றிவிட்டேன், இனிமேல் நானெருபோதும் அழமாட்டேன்,

பரசகாயி—இப்போ நீ ஒரு நல்ல பெண்ணாயிருக்கின்றாய். எவ்வளவு அழுதாலும் முடிந்தவையை மாற்றிக்கொள்ளல் கூடாது, லந்தி என்னும் மருத்துவப்பெண் அதிக தயாளகுணமுள்ள நல்ல மனுஷி, சந்தோஷமுகத்தைக் காட்டு, நாம் போகப்புறப்படுவோம்

கமலாம்பாள்—அம்மணி! நான் இப்பொழுது மிகச் சந்தோஷமுடையவளாயிருக்கிறேன்.

பரசகாயி உடனே அந்தப் பாலியப் பெண்ணுக்கு ஒரு கிளாஸ் குடிவகையைக் கொடுத்து அவளின் துக்க அல்லலை மறச்செய்தனர்.

உடனே அவ்விருவரும் சாப்பிலிருந்து வெளிப்பட்டு வருகையில் கமலாம்பாள் தன்னுடன் வேலை செய்துகொண்டிருந்த ஸ்திரீகளிடம் பிரியாவிடை பெற்றுவரவே, அங்குள்ள ஸ்திரீகள் கமலாம்பாள் சூத்திராப்பிரகாரம் வந்து சம்பவித்ததைக்குறித்துத் துக்கமாய்ப் பேசிக்கொண்டார்கள்.

பரசகாயியும் கமலாம்பாளும் வண்டியிலேறி உட்கார்ந்தார்கள். வண்டி லந்திவீட்டுக்குச் செல்கையில் குளிர் அதிகமாயிருந்தமையால் பரசகாயி தனது சால்வையால் காதுகளை மூடிக்கொண்டனர். கமலாம்பாள் குளிரில் நடுக்கமடைந்தனள். இக்குளிர் கமலாம்பாளின் கெற்பத்தில் தாக்கியது, வண்டி லந்தி மருத்துவிச்சி வீட்டை நோக்கிப்போய்க்கொண்டிருந்தது?

பரசகாயி—கமலாம்பாளே! துக்கப்படாதே, லந்தி உன்னை அதிக கவனமாயும் பத்திரமாயும் பட்சமாயும் வைத்துப் பாதுகாப்பாள், நான் எப்பொழுதும் உனது நண்பியாயேயிருப்பேன், நீ அவரைக் காதலிக்கின்றாயா?

கமலாம்பாள்—அம்மணி! அவரின் நாமத்தை உச்சரியாதீர், நீர் அவர் பெயரைச்சொல்வீராயின், நான் பைத்தியககாரியாய்ப்போவேன், அவரை யான் காதலிக்கின்றேனே அல்லது வெறுக்கின்றேனே யானறியேன், நான் அவரைக் கொல்வேனே அல்லது அவரைக் கட்டியணைத்து முத்தமிடுவேனே யானறியேன், ஐயோ தெய்வமே! அவரைக்குறித்து என்மனதில் நிகழும் எண்ணங்கள் எவ்விதமென மட்டுக்கட்டியறிய யானே இயலாதவளாகவிருக்கின்றேன்,

பரசகாயி—கமலாம்பாளே! நீ அவரை முற்றும் மறந்துவிடு,

கமலாம்பாள்—அது ஒருபோதும் முடியாது,

பரசகாயி—கூடாதுதானே? இது ஆச்சரியம்,

கமலாம்பாள்—ஒன்றில் யான் அவரைத் தெய்வமாய்க்கொண்டு வணங்குவேன் அல்லது பழிக்குப்பழி வாங்குவேன்,

பரசகாயி—கமலாம்பாளே! நீ என்னை ஆச்சரியமுறச் செய்கின்றனை, இவ்விதம் கடுமையாய் நீ பேச யாதொருபோதும் முன் கேட்டிருக்கவில்லை, ஆண்டவனுக்காய் மனதையடக்கு, அத்தகைய விநோதவெண்ணங்களுக்கு உன்மனதை ஒருபோதும் செலுத்தாதே,

கமலாம்பாள்—அம்மணி! உமக்கு மனவருத்தத்தைத் தரக்கூடிய எதையாவது நான் சொல்லியிருப்பேனுயின் என்னை மன்னியுங்கள்,

இவ்விதம் சொல்கையில் அந்தப் பாலியப்பெண் விம்மி யழுதனள். பரசகாயி பின் ஆறுதல் சொல்ல வெத்தனிக்கவில்லை, லந்திவீட்டைப் போய்ச் சேர்ந்தார்கள் வண்டிக்கதவு திறக்கப்பட்டது, இறங்கி வீட்டுக்குப் போகையில் லந்தி வாசலில் நின்றனள், பரசகாயி கமலாம்பாளின் கையைப் பிடித்து லந்திக்கு அறிமுகம் செய்தார். அந்த வயோதிப மருத்துவிச்சியைப் பார்த்த மாத்திரத்து அவளின் தோற்றம் கமலாம்பாளுக்கு அருவருப்பைக்கொடுத்ததாயினும், சந்தோஷமடைந்தவள்போல மாய்மாலஞ்செய்தனள், இப்பொழுது கமலாம்பாளுக்கு அவ்வீட்டுள் போவதற்குப் பிரியமில்லாது பின்வாங்க, பரசகாயி அவளின் கையைப்பிடித்து, எனது அருமையான கமலாம்பாளே வாவென்று மிகப் பட்சமாயும் தாழ்மையாயுமழைத்தனள்,

அனுப்பப்பட்ட கமலாம்பாள் பரசகாயியின் வேண்டுதலின்படி லந்தியின் வீட்டுள் புகுந்தனள், (வரும்)

## சித்திரங்கள்.



எல்லாவித சித்திரம் தோண்டலும் படமெழுதலும் மீனும்பாள் அச்சியந்திரசாலையில் நம்மால் சரசமான சார்ஜில் செய்து கொடுக்கப்படும்.

டீ. ஜி. பொன்செக்கா.
என்கிறேவர்,
கோம்பனித்தெரு,
கொழும்பு.



உ
சிவமயம்.

# விஜய பானு.

# Wijaya Bhanoo.

விரோதிகிருது ௵ மார்கழி ௴ 23-உ.

### உப பிரதிநிதித் தெரிவு.

நமது காருண்ணிய அரசாங்கத்தவரால் தமிழருக்கும் கீழ்நாட்டுச் சிங்களவருக்கும் ஒவ்வோர் பிரதிநிதிகளை அதிகமாய்த் தேசாதிபதியவர்கள் தெரிந்து நியமிக்கலாமென நமது கொலோனி மந்திரியாரவர்கள் நமது மாட்சிமை தங்கிய அரசரவர்கள் கட்டளைபண்ணியதாக அறிவித்தது நம்மவர் சகலருமறிவார்கள். புதுச் சட்டநிருபணசங்கத்தில் பிரதிநிதிகளாயிருப்பதற்கு ஆங்கிலேயர்களாலும் பேர்க்கர்களாலும், இலங்கையராலும் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டாயிற்று. இதுகாறும் தமிழர் பிரதிநிதியும் சிங்களவர் பிரதிநிதியும் தேசாதிபதியவர்களால் தெரிவு செய்யப்படவில்லை. இப்பொழுது தெரிவு செய்யப்பட்டிருக்கும் அங்கத்தவர்கள் கல்வியறிவிலும் அனுபவத்திலும், பரோபகாரத்திலும் மேலானவர்களாகவிருக்கின்றார்கள், இவர்களுடன் ஒத்துழைக்கக்கூடிய தக்கவரையே தேசாதிபதியவர்கள தெரிவு செய்வார்களெனக காத்திருக்கப்படுகின்றது. தற்போது சிங்களவர் பிரதிநிதியாய் மிஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் தெரிவு செய்யப்படுவார்களென்பதாய் ஓர் வதந்தியுலாவுகின்றது. தமிழர் பிரதிநிதியாய் இன்னவர்தான் தெரியப்படுவாரெனும உறுதியான சத்தம் இன்னும் வெளிப்படவில்லை. எவ்விதமும் இருவர் பிரதிநிதிகளும் இவ்வாரத்துள் தேசாதிபதியவர்களால் தெரியப்படுவார்களென நம்பப்படுகின்றது.

பரப்பிரமணேயநம:

## புனர் ஜென்ன உண்மை.

(22.ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்)

சரீரத்தினல் அல்லது மனதினல் நாம் செய்யும் ஒவ்வொரு செய்கையும். நாம் நினைக்கும் ஒவ்வொரு நினைப்பும், நுண்ணிய ரூப நமது மனதில் சமஸ்கார ரூபத்துடன் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. அது சிலகாலம் மறைவாயிருந்த மானத அலையின் உருவத்துடன் எழும்பி புது இச்சைகளை உண்டுபண்ணுகின்றது. இந்த விருப்பம் வேதாந்தத்தில் வாசனையென்று சொல்லப்படுகின்றது. பேராசையென்னும் வாசனைகள் புதுச் சரீரத்தை உண்டுபண்ணுதற்கு ஏதுவாகவிருக்கின்றன. எவராவது உலக இன்பத்தையும் பொருளையும் இச்சிப்பாராயின் அவர் அவற்றைப் பெறுதற்காய் நூறு பிறவிக்குப் பின்னெனினும் மறுபடி பிறக்கவேண்டியவராகின்றார். பேராசையின் போக்கை எதுவும் தடைப்படுத்தல்கூடாது. சீக்கிரத்திலோ அல்லது சில காலத்தின் பின்னரோ அவா நிறைவேற்றப்படவேவெண்டும்.

சரீரம், புலன், மனம் என்பன எண்ணியோ எண்ணமலோ செய்யும் ஒவ்வொரு செய்கையும் சூக்கும சரீரத்தில் சேகரித்து வைக்கப்பட்ட புதையலான சிந்தனையை ஒத்ததாகவே யிருக்கும், பருத்த சரீரத்தின் சுபாப வளர்ச்சியும், வளருந் தன்மையும், மாறுதல்களும். தொழிற்படுத்தும் காரணத்தின்படி உண்டுபடுகின்றன. இங்ஙனமன்றி எல்லாவித செய்கைகளும், ஒவ்வொருவரும் செய்யும் வெவ்வேறன செய்கைகளும், அவைகளைச் செய்யும் சரீரத்தின் நிலைபரமும், சரீரம் நிலைபெற்றிருப்பதற்குள்ள எல்லாச் செய்கைகளும் சூக்கும சரீரத்தில் சேர்ந்திருந்த மறைவான பதிப்பின் வெளித்தோற்றங்களேயாம். மனதில் பதிந்த மிருக அல்லது மனுஷ சுபாபத்துக்கொப்ப ஏற்படும் மிருக சரீரத்தை அலலது மனுஷ சரீரத்தை எடுத்தல் இவைகளில் தங்கி யிருக்கின்றது. ஆகையினலே தோற்றுதற்கு முழுதும் ஆயத்தமாயும் பெலமாயும் உள்ள பிரதான அவாவுக்கு புலன்களின் கருவிகள் ஒத்தனவா யிருக்கவேண்டும். அவைகள் இந்த அவாக்களின் வெளியரங்க தோற்றங்களாகவிருக்கின்றன. சாப்பிடுதற்கு பசி அல்லது விருப்பமில்லாதிருந்தால், பற்களும் தொண்டையும், இரைப்பையும் உபயோகமற்றனவாம். பிடித்தற்கும் நடத்தற்கும் விருப்பமில்லா திருக்குமானல் கைகளும் கால்களும் அப்பிரயோசனமாம். அதுபோலவே சப்த, ரூப, ரச, பரிச, கந்தங்கள் என்னும் பஞ்சப்புலன்களின் விருப்பப்படியே செவி. மெய், வாய், கண், மூக்கு என்னும் பஞ்சப்பொறிகள் உண்டுபட்டிருக்கின்றனவென்பதைக் காண்டல்கூடும். நாம் நமது கைகளை உபயோகித்தற்கு விருப்பமில்லா திருப்போமானல், நாமவற்றை முற்றும் பாவிக்காது விடுவோமானல், சில மாதங்களுள் அவை உலர்ந்து சாகும். இந்தியாவில், தங்கள் கைகளை உயர்த்திக்கொண்டு அவைகளை உபயோகிக்காதிருக்கும் மார்க்க வைராக்கிகள் இருக்கிறார்கள். சில மாதங்களின் பின் அவர்களின் கைகள் உலர்ந்து விறைத்துச் செத்துப்போகின்றன. ஆறுமாதக்காலத்துக்கு அண்ணுந்து படுப்பவன் நடக்கும் சக்தியை இழக்கின்றான். நமது அவயவங்களினதும் கருவிகளினதும் உபயோகவின்மை அனேக தீங்கானபேற்றைக்கொண்டுவந்து விடுவதற்கு அனேக அத்தாட்சிகளிருக்கின்றன.

பொதுவாய் மனுஷ சரீரம் மனுஷனின் சித்தத்துக்கு சாதாரணமாய் ஒத்திருப்பதுபோல, மனுஷ சரீர கட்டடம் மனுஷனின் நடை, விருப்பம், சித்தம், எண்ணமாகிய இவைகளுக்கு ஒத்ததாகவிருக்கின்றது. ஆகையினலே வெளிச்ச சுபாபம் உட் சுபாபத்தின் வேஷமேயல்லாது வேறன்று. பலவிதமான உருவங்களில் ஒன்றன்பின்னென்றாய் படிப்படியாய் புனர் ஜனனமெடுப்பது ஒவ்வொருவரதும் உட் சுபாபமேயாம். ஒரு மனுஷன் சாகும்பொழுது, ஜீவனென்று சொல்லப்படும் ஆன்மா அழிகின்றிலது. ஆனல் அது கட்புலனுக்குப் புலப்படாத ரூபத்தை யுடையதாக விருக்கின்றது. காரண காரியம் என்னும் பிரமாணத்தால் வித்தியாசமான ஜீவர்களை ஒருங்கு சேர்த்துப் பந்தித்திருக்கும் கயிற்றைப்போல அது இருக்கின்றது. சூக்கும சரீரம் அநாதி நித்தியமாயுள்ள சத்தென்னும் சமுத்திரத்திலிருந்து கிளம்பும் நீர்க்குமிழியை ஒத்ததாகவிருக்கின்றது. அது நிர்விகார சித்தின் பிரதிபிம்பத்தை அடக்கி யிருக்கின்றது. இந்த நீர்க்குமிழி சில வேளையில் கட்புலனுக்குத் தோற்றாத ஆவியாகி பின் மழையாய் அல்லது பனியாய் மறுபடியும் புகையாய் அல்லது சேறாயிருப்பதுபோல, சூக்குமசரீரம் சில வேளைகளில் தோற்றாதும், சில வேளைகளில் தோற்றத்துக்கு ஆயத்தமாயிருந்த விருப்பத்துக்கும் ஏதுக்கும் ஏற்ப மிருக அல்லது மனுஷ ரூபங்களில் தோற்றியிருக்கின்றது. ஆனல் அது ஒருபோதும் அழிகிறதேயில்லை. அது வேறு கிரகங்களுக்குப் போகவும அல்லது இப்பூமியில் மறுபடி பிறக்கவும் கூடும். இவ்விதம் போதலும் பிறத்தலும் ஒருவன் தான் தனது நீடிய ஜீவிய காலத்தில் கொண்டிருந்த சார்பினதும் நோக்கத்தினதும் சுபாபத்திலும் பலத்திலும் தங்கி யிருக்கின்றது. இது வேதாந்தத்தில் மிகத்தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஜீவியகாலம் முழுவதிலும் அதிக பெலமாயுள்ள எண்ணமும், சித்தமும், விருப்பமும், மரணகாலத்தில் தலைமையாய் வந்து மரிக்கும் மனுஷனின் உட்சுபாபத்தை உருப்படுத்தும். புதிதாய் உருப்படுத்தப்பட்ட உட்சுபாபம் ஒரு புதிய ரூபத்தையுடையதாகவிருக்கும். உட்சுபாபத்தை உருப்படுத்தும் எண்ணம், சித்தம், அல்லது விருப்பம் அதன் பிறப்புக்கேற்றவைகட்குதவியான அந்தஸ்தை அல்லது சூழ்ந்திருக்கவேண்டியவைகளைத் தெரிந்துகொள்வதற்கு வலலமை யுடையதாக விருக்கின்றது. இதை சுபாப தெரிவின் பிரமாணமென தோற்ற மாற்றத்தைக்குறித்து எழுதிய சாஸ்திரிகள் கூறியிருக்கின்றார்கள்.

வெவ்வேறுவிதமான மரங்களின் வித்துக்கள் பொதுவாய்த் தம்மைச் சுற்றியிருக்கும் பலவித பதார்த்தங்களில், தத்தமக்கேற்றவைகளைத் தெரிந்து வெவ்வேறு அளவான பூதியங்களைக் கவர்ந்து தமக்கு சொந்தமாக்கிக்கொள்கின்றன. ஒரு சிர்தூர மரக்கொட்டையையும் வேறொரு முந்திரிக்கொட்டையையும் ஒரு சட்டியில் உரமபோட்டு நாட்டி யிருக்கின்றோமென வைத்துக் கொள்வேம். இரண்டு கொட்டைகளி லிருந்து உண்டுபட்ட செடிகளுடைய வளர்ச்சியின் வல்லமை ஒருவிதமானதாக விருக்கின்றது. அவற்றைச் சுற்றியிருககும் மண், ஜலம், வெப்பம் முதலியவை ஒரேவிதமானவையாயிருக்கின்றன. ஆனல் அந்த வித்துகள் ஒவ்வொன்றிலும் சில நூதனங்களிருககின்றன. அவை பொதுவாய் தம்மைச் சூழ்ந்திரும்பவைகளியிருந்து தத்தம் நூதனசுபாபத்தினதும், உருவத்தினதும், பழத்தினதும் . புஷ்பத்தினதும், இலையினதும் வளர்ச்சிகருத் தகுந்த வெவ்வேறு அளவுள்ள பூதியங்களையும் பதார்த்தங்களையும் கவர்கின்றன. முந்திரிக்கொட்டையைக் கசப்புக்கொட்டையென வைத்துககொள்வோம். வித்தியாசமான நிலைபரங்களின் நிமித்தம் கசப்பு முந்திரிககொட்டையின் நூதன சுபாபம் இனிமையான முந்திரிக கொட்டையாய் மாறுமானல், அப்பொழுது மாத்திரம் கொட்டை மாற்ற மடைவதுடன் மரத்தினதும், இலையினதும் பழத்தினதும் முழுச்சுபாபமும் மாறும், அது கசப்புமுந்திரிக கொட்டையாயிருந்தபொழுது தன்னைச் சுற்றியிருககும் பதார்த்தங்களில் கவர்ந்தவையை அதன்பின் கவரவும், உட்கொள்ளவும் ஒப்பவும்மாட்டாது, அதுபோலவே சுபாப தெரிவென்னும் பிரமாணப்படி சாகும் மனுஷனின் புதிதாய் உண்டான சிந்தனை உடல் அதன் தோற்றத்துக்கு அல்லது வெளிப்படுகைககு உதவககூடிய சூழ்ந்திருககும் பதார்த்தங்களில் வேண்டப் படுவனவற்றைத் தெரிந்து கிரகிகதும பெற்றார் புனர்ஜனனமெடுப்பவரைச் சுற்றியிருப்பவற்றின் பிரதானபகுதிகளாக விருககிறார்களேயன்றிப் பிறிதன்று. புனர்ஜனனமெடுப்பவரினது புதிதாயுண்டுபட்ட சுபாபமென்னும் சூககும சரீரம், சுபாபதெரிவு என்னும் பிரமாணப்படி தனககுத் தெரியாமலே தனககேற்ற பெற்றாரைத்தெரிந்து அவர்களின் பிள்ளையாகப்பிறககின்றது, உதாரணமாக, நாமொரு சித்திரககாரராய் வருதற்குப் பேரவாவுடையவராயிருந்தால், அவ்விதம் வருதற்கு யாம் பிரயாசைப்பட்டு சித்தியடையாதிருந்தால், சரீரம் அழிந்தபின்னர் மிக விசேஷித்த சித்திரககாரனய் வருதற்கு வேண்டப்படுவன சூழப் பெற்றிருககும் பெற்றாரின் பிள்ளையாய்ப் பிறப்போம்,

### நாம்.

சென்ற 4-ங்உ வியாழக்கிழமை களிமண்கோட்டு வாசலால் வருகையில் வே. மூ. வேலாயுதம்பிள்ளை, துரையப்பா, மூ. வே. பொன்னம்பலம், சி, செல்லையா என்பவர்கள் நகரசங்கத்துக்குச் சமீபத்தில் காத்திருந்து அடித்தார்கள். நாம் உடனே பொலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நமது முறைப்பாட்டை எழுதி வைத்து மறுநாள் பொலிஸ்கோர்ட்டில் முறைப்பாடு செய்தோம்: சித்தாசி கொடுக்கப்பட்டது. மறுநாள் எதிரிகள் தோற்றி தாம் சுத்தவாளிகளெனச் சொன்னர்கள். விளக்கம் வரும் 9-ந் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்

## TELEGRAMS.

### தந்தி சமாச்சாரங்கள்.

சென்ட் பீற்றோஷ்பர்க்—காயமடைந்த ருஷியரையும் செத்தவர்களையும் விதயில் சிதைத்த கொடுமையைத்தானும் கவனியாது சமாதானமான குடிகளை ருஷிய துப்புள் மனுஷ இரக்கந்தன் நடத்தினர்களென்றும், குண்டுப்பிரயோகஞ்செய்யப்பட்டு விடுதலையிருந்த பெண்களையும் பிள்ளைகளையும் ருஷிய பாளத்தவர் மீட்டார்களென்றும், யுத்தத்தில் நூறு ருஷியர்கள் கொல்லப்பட்டவர்களும் காயப்பட்டவர்களுமானர்ளென்றும் தாபிறிஸிலுள்ள ருஷிய கொன்சல் சொல்லியிருக்கின்றனர்,

சேன்ட்பீற்றேர்ஷ்பர்க்—மூன்று துப்பாக்கிப்பட்டாளத்தவரும், மூன்று கொஸாகபட்டாளத்தவரும், குதிரை பூட்டிய இரண்டு பீரங்கிப்பட்டாளமும் தாபிறிசுக்குப் பிரயாணமாயினவென்பதாய் ருஷிய ஜல்வாவிலிருந்து வந்த தந்தி கூறுகின்றது.

திஹிரன்—மிஸ்டர் ஷஸ்டர் உத்தியோகத்திலிருந்தும் நீக்கப்பட்டாரென்பதாயறிவிக்கப்பட்டனர்.

தமக்காய் நியமிக்கப்பட்டவர் வந்தவுடன் ஆபீஸைப்பாரங் கொடுப்பதாய் மிஸ்டர் ஷஸ்டர் அரசாங்கத்துக்கறிவித்தனர்.

லண்டன்—பிரித்தானிய கொன்சலைச் சந்திக்கச் சென்ற இந்திய சோயருக்கு பேர்ஷிய வீதிக் காவற்காரர் சுட்டார்களென்றும் ஒருவன் இறந்தனனென்றும ஷிராவில் தெரிவிக்கப்பட்டது. காசுறாமில் இரண்டு இந்திய சோயர்கள் தாக்கிக் கொல்லப்பட்டார்களெனச் சொல்லப்படுகின்றது, சீராஸ் நிலைபரம் பயங்கரமானதாக விருக்கின்றது.

லண்டன்—பிரித்தானிய கொன்சல் மிஸ்டர் சிமார்ட் கஷ்கை வீதியில் இந்தியசோயர்களுடன் போகையில் தாக்கப்பட்டார்களென்றும், அவரைக் காணவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது. கஸறன் தேசாதிபதி அவருயிருடனிருப்பதாக அன்னிய தேச விஷய மந்திரி ஸ்தானத்தில் சொல்லப்படுகிறது.

திஹிரன் — இருமுறை தாக்கப்பட்ட சோயர்களின் தொகை நூறுபேர். இவர்களில் இருவர் கொல்லப்பட்டார்கள். எழுவர் காயமடைந்தனர். இருவரைக் காணவில்லை. கஸறனில் அவர்கள் இப்பொழுது நிலையாயிருக்கிறார்கள். அவர்களுக் குதவியாய் கோர்ணல் டெக்கில்லின் கீழ் 150 சோயர்கள் போனர்கள்.

கொன்ஸ் மிஸ்டர் சிமார்ட் கஸறனிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள சரவன் சேரியில் காயமடைந்தவரா யிருக்கிறார்,

ருஷியாவும் பிரித்தானியாவும் அதிசினேகசம்பந்தமுடையவையா யிருத்தல்பற்றி, பார்ஸீகம் இனிமேல் பிற சாதியாரை உத்தியோகத்தில் நியமிக்கும்பொழுது இரு இராஜியத்தவரதும் கொன்சல்களின் சம்மதத்துடன் நியமிப்பதாய்ப் பார்ஸீகவரசாங்கம் ருஷியவரசாங்கத் துக்கறிவித்தது,

சேன்ட் பீற்றேர்ஷ்பர்க்—தாபிறிஸிலும், றெஷிலும், என்செலியிலும், ருஷியருக்கு விரோதமாய்க் கலகம் விளைப்பவர்களை அடக்கப் பார்ஸீகவரசாங்கம் சகதியற்றதாயிருப்பதால், ருஷியவரசாங்கம் தனது சேனுதிபதிகளை இராணுவச்சட்டப்படி தண்டிக்க உத்தரவளித்திருப்பதாய் ருஷியவரசாங்கம் பார்ஸீக வரசாங்கத்துக கறிவித்தது,

## LOCAL AND GENERAL,

### சுதேச வர்த்தமானம்.

காலநிலை,

வெய்யில் மிகவதிகம். இரவில் பனியும் குளிரும் சகிக்க முடியாம லிருக்கின்றன. அகவிலை மிகுவிலையே.

தைப்பொங்கல்.

இது வரும் ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. அரசாங்க ஆபீசுகளும் வங்கிகளும் அடுத்த 15-உ திங்கட்கிழமை சாத்தப்படும்.

புதுத் திருத்த சட்டநிருபண சபை.

இது வரும் 16-உ வியாழக்கிழமை சங்க சாலையில் கூடும். இதன் முன் தமிழர் உப பிரதிநிதியும், கீழ்நாட்டுச் சிங்களவர் உப பிரதிநிதியும் நியமிக்கப்படுவார்கள்.

தீவு வண்ணர்.

தீவுத் தோட்டத்தை அரசாங்கத்தவர் எடுக்க எண்ணுகிறார்களென்றும், அதனால் தாம் பேரவஸ்தைக்காளாக வேண்டியவர்களாகவிருக்கிறார்களென்றும், அதற்கேற்ற பரிகாரத்தைச்செய்து தங்களை இரட்சிக்கும்படியும், தீவிலிருக்கும் வண்ணர் சகலரும் சேர்ந்துபோய் கௌரவ இராமநாதன்துரை அவர்களுக்கு முறையிட்டார்கள். துரையவர்கள் அங்குள்ளாரின் தொகையையும் அவர்களுக்கு நேரிட விருக்கும் தீங்கையும் விபரமாய் எழுதிக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறார்கள். வண்ணருக் கதிட்டமுண்டாமென எண்ணுகின்றோம்.

### நமது தேசாதிபதி.

இவர்களும் பாரியாரும் சென்ற 3-௳ பின்னேரம் இந்தியாவிலிருந்து இங்கு வந்தார்கள்.

### அபாயம்.

அங்குலானையில் புகைரதத்தால் ஒரு சிங்கள மனுஷன் கட்டி விழுத்தப்பட்டு கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டான், அவன் சென்ற புதன்கிழமை மரித்தனன்.

### கொலை.

களுத்துறையைச் சேர்ந்த பேலியக் கொலை யென்னுமிடத்தில் சென்ற 2-ந்தேதி ஒரு கொலை நடந்தது. அங்குள்ள றப்பர் தோட்டத்துக் காவற்காரனும் கந்தையா வென்பவன் கூலிகள் வசிக்கும் லயமொன்றிலிருந்து விளையாடுவதைக் கண்டு வெளியில் நின்று கதவைப் பூட்டிவிட்டனன், உள்ளிருந்தவர்களுள் பிறம்பி சிங்கோவென்னும் சிங்களவன் பிடிக்கப்படாது தப்பியோடிப் பக்கத்து அடுத்த வீட்டின் வீட்டு வழியாய்ப் பிரவேசித்தனன். பிரவேசிக்கவே, அந்த வீட்டிலுள்ள கூலியாட்கள் பயந்து கூக்குரலிட காவற்காரன் அவனைச் சுட்டுக் கொன்றனன். சுடுபட்டவன் இறந்துபோனதைக் கண்ட காவற்காரன் பயந்து சாக்குள் பிரேதத்தைப் போட்டு றப்பர்மரத்தண்டை மறைத்திருந்தான். காவற்காரன் பிடிக்கப்பட்டிருக்கின்றான். விளக்கம் நடைபெறுகின்றது.

### மேஜர் மோடர்.

குருனாக்கலில் சுப்பிறிங்கோட்டுப் பிறக்டராயிருக்கும் மேஜர் மோடர் அவர்களினதும் பாரியாரினதும் வெள்ளிககலியாணம் நடைபெற்றது. பெருந் திரளான ஜனங்கள் கூடி வாழ்த்துக் கூறினார்கள்.

### மட்டக்களப்பு சுகாதாரச் சங்கம்,

இச்சங்க அங்கத்தவர்களாய் ஸ்ரீமான் பிறக்டர் நாகப்பர் அவர்களும், ஸ்ரீமான். கனகசபை அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

### காலிச் சிறைச்சாலை,

இங்கே இம்மாதம் 1௳ ஒரு வயோதிபன் மண்டை நொருங்கிச் செத்துக் கிடக்கக் காணப்பட்டான். விசாரணை நடந்தும் எவ்விதம் அவன் மண்டை நொருங்கிச் சாகவெத்தனித்தனனென்பது வெளிவரவில்லை.

### ஒப்சேர்வர் பத்திராதிபர்.

இவர் கல்கிஸைசயில் கடலில் ஸ்நானஞ் செய்யப்போனவிடத்து நீரோட்டத்தாலெடுத்துக்கொண்டுபோகப்பட்டு மரித்தனர். இவர் மனைவியும் பிள்ளையும் அருந்தப்புத் தப்பினார்கள்,

### முத்துச் சலாபம்

இதன் குத்தகைக்காரராகும் ஆங்கில கொம்பனியார் தமக்கு சென்ற ஜூன்மாதத்துடன் முடிந்தவருஷம் பெரும் நஷ்டமென்பதாய்க் கணக்குக் காட்டி யிருக்கின்றார்கள்.

### திருட்டு.

திரும்வேக கம்பனியிலிருந்து பித்தளைக்கம்பியைத் திருடிய பேலிஸ் அப்பு என்பவன் ஒருமாத கடூழியமறியல் விதிக்கப்பட்டான்.

### யாழ்ப்பாணப் புகைரதப்பாதை.

இது சென்ற திங்கட்கிழமை துவக்கம் ஓடிக்கொண்டு வருகின்றது. தபால் போக்குவரத்துக்குண்டுபட்ட தடை நிவர்த்தியாயது.

### புத்தூர்த் தபாலாபீசு.

இதில் 332 ரூபா களவுபோனதாயும் அதன்நிமித்தம் அங்கிருந்த போஸ்ட்மாஸ்டருக்குப் பதிலாய்ப் பின்னொருவர் நியமிக்கப்பட்டதாயும், போஸ்ட்மாஸ்றர் குறைந்த தொகையைக் கொடுத்துவிட்டு வழக்கு நடத்தினாரென்றும், சமுசயப்பட்ட தபாற் சேவகர்கள் பிடிக்கப்பட்டார்களென்றும் சமாச்சாரமெட்டியது.

### லோக்கல் பரீட்சை.

இது சென்றமீ 11-௳ துவக்கம் ஒரு வாரம்வரை நடந்தது. நூற்றுக்கணக்கானவர்கள் பரீட்சைக்குப் போயிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் சீனியர் லோக்கல் பரீட்சைக்கு 155 பேரும் ஜூனியர் லோக்கல் பரீட்சைக்கு 141 பேரும் போயிருக்கிறார்கள். வரும் சட்டநிரூபண சங்கத் தெரிவில் யாழ்ப்பாணத்தில் பெருந்தொகையினர் வாக்குச்சுதந்தரிகளாவார்களென்பதாய்ச் சொல்லப்படுகின்றது.

### சேர் வெஸ்ட் ரிட்ஜுவே.

நமது பழைய தேசாதிபதியாகு மிவர் வடபோர்ணியோவுக்குப் போகும் பாதையில் இன்று இங்கு வந்திறங்கினர்.

### தீ விபத்து.

கொழும்பு பிறக்கோட்டையில் புதுச் சோனகதெருவினதும் டாம் வீதியினதும் சந்தியிலுள்ள வாண விளையாட்டுச் சாமான்கள் சாப்பில் சென்ற செவ்வாய்க் கிழமை தீப்பற்றி முற்றையும் நாசமாக்கி விட்டது. தீபற்றி யெரியும்போது அப்பாதைவழியாய் யாரும் போகவிடாது தடைபட்டனர், உண்டுபட்ட நஷ்டம் ஐயாயிரம் ரூபா விருக்குமென்பதாய் மதிக்கப்படுகின்றது. அக்கட்டடத்தில் சுவரையும் தகடுகளையும் தவிர வேறொன்றும் மிஞ்சவில்லை.

### தீப்பிடித்திறத்தல்.

காலியில் தபாலாபீசுப் பரிசோதகராயிருக்கும் மிஸ்டர் காஸ்டேர்லின் ஏழுவயதுப் பெண் உடையில் தீப்பிடித்தெரிந்தமையால் சென்ற மாதம் 31-௳ மரித்தது மறுநாள் புதுவருஷப்பிறப்பன்று பிரேதம் அடக்கஞ் செய்யப்பட்டது.

### கள்ள நோட்டு.

யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு அனுப்பப்பட்ட நூறு ரூபா நோட்டு கள்ள நோட்டென்பதாய் பொக்கிஷசாலை மெஸ் வான்ஹோவ் கூறினர். இங்குள்ள பொலிஸ நீதிபதியவர்கள் கொம்மிஷனைத் திருப்பியனுப்பினார்கள்.

### ஆகாய விமானம்.

மிஸ்டர் ஹோர் ஒஸ்டர் தமது ஆகாய விமானத்தில் பின்னும் மேலேபோய்க் காட்டவேண்டிய எத்தனங்களைச் செய்கின்றனர்.

### இலங்கை இந்திய புகைரதப்பாதை

இப்பாதை வேலையை இலங்கையரசாட்சியார் தீவிரமாய் முடித்து வருகின்றனர். தலைமன்னாருக்கும் மன்னாருக்குமிடையிற்றான் தாமதமிருக்கிறது. அக்கடல் சிறிதாகையால் 900 அடிக்கு ஒரு ஸ்தம்பமமைத்துப் பாலமிடப்படுகிறது. தற்போது மன்னாருக்கும் மதவாச்சிக்குமிடையில் 15 மைல் தூரம் புகைரதப் போக்குவரவு செய்யக்கூடியதாய் வேலை முடிந்திருக்கிறது, இதற்கான வண்டிகளும் கொழும்பில் துரிதமாய் வேலை நடக்கின்றன. இந்திய அரசாட்சியார் அடுத்த வருஷத்திலும் வேலை செய்து பூர்த்தியாக்கமாட்டாரெனக் கருதக்கிடக்கின்றது. தலைமன்னாருக்கும் தனுக்கோடிக்குமிடையிலுள்ள கடலின் தூரம் 21 மைல். புகைரதப்பாதை முற்றுப்பெற்றவுடன் பிரயாணிகளைக் கொண்டு செல்வதற்காக இரண்டு புகைவள்ளங்கள் இங்கிலாந்திற் செய்யப்படுகின்றன. பாம்பன் கடலில் 40 அடி தூரத்துக்கு ஒரு ஸ்தம்பமமைக்கப்படுகின்றது. அப்படியமைக்கும் ஸ்தம்பங்கள் 136. அப்பாலத்தின் மத்தியில் 200 அடி தூரத்திற்குச் சங்கிலிப்யாலம் இடப்படும் இது மிகப் பிரயாசையான வேலையாதலால் இவைகளை யமைத்தற்கு ஒரு வருடஞ் செல்லுமாம். ஆதலால் 1912ம் ௵ ஆவணி மாசமே இலங்கையும் இந்தியாவும் இணைக்கப்படுமென நம்பப்படுகிறது.

### மேஸ் எவ். டென்ஹோர்ஷ்ட்.

நமது நியாயதுரந்தரர் சிரேஷ்டராயிருந்து இங்கிலாந்து சென்று அங்கு பலவருஷந் தங்கியிருந்த இவர் தமது மனைவியாருடனும் மிஸ்டர் ஷேல்டன் தசேரத்துடனும் அவர் மனைவியாருடனும் இங்கு சீக்கிரம் வருவார்களென்றும், இவர் கல்வேர்ளி வீட்டில் வசிப்பாரென்றும், பழையபடி நியாயதுரந்தரர் உத்தியோகத்தை நடத்தும்படி ஏவப்படுவாரென்றும், மிஸ்டர் சேரம் கொழும்பில் அத்துவக்காத்து வேலையை நடத்துவாரென்றும் தெரியவருகின்றது.

### கிருன்ட் டியூக் போறிஸ்.

இவர்கள் நேற்று இங்கு வந்திறங்கினார்கள். 21 மரியாதை வேட்டுகள் சுடப்பட்டன. நமது அரசாங்கத்தவரால் இராஜமரியாதையுடன் வரவேற்கப்பட்டனர்.

### தேக வியோகம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர் முதலிய மகாவித்துவான்களின் வாத்தியாயராயிருந்த நல்லூர் ஸ்ரீமான், சரவணமுத்துப்புலவரின் புத்திரியும், ஸ்ரீமான். சிற்றம்பலம் அவர்களின் அரிய பத்தினியும், கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில் துவிபாஷிக முதலியாராயிருக்கும் ஸ்ரீமான். கைலாசபிள்ளை அவர்களின் மாதாவுமாகிய உத்தமி தேகவியோகமாயினரெனக் கேள்வியுற்றுத் துக்கமடைந்தோம். அவர் சுற்றமித்திருடன் நாமனுதாபப்படுகின்றோம்.

### டக்டர் தேகவியோகமாயினர்.

தமிழ்ச்சாகியத்தவருள் கீர்த்திபெற்றவரும், ஜீவகாருண்ணியமுள்ளவரும், எவரையும் பொருளை அபியாது அன்பாய் ஆதரித்துவந்தவரும், பலர்க்குத் தருமவைத்தியஞ்செய்தவரும். பாரிய குடும்பத்தையுடையவரும், கருணை பூஷணரும், எவராலும் நன்குமதிக்கப்பட்டவருமாகிய டக்டர் வேதாரணியம் சரவணமுத்து அவர்கள், தம்மனை புத்திரர், சுற்றமித்திரர் மத்தியில் அவர் பரிதவிக்கவிட்டுப் பரமபதியடைந்தனரென்னும் துக்கசமாச்சாரத்தைக்கேள்வியுற்று யாம் துன்பசாகரத் தமிழ்ந்தினோம். இந்தப் பெரிய மனுஷனையிழந்து துன்புறும் அவர் மனைவி மக்களாதியருடன் யாமனுதாபப்படுகின்றோம்.

## பெரியோரென்ன பேசிக்கொள்ளுகிறார்கள்.

குடிகாரர் குழப்பம் கொழும்பில் மிக வதிகப்பட்டு வருகின்றதாம்.

துஷ்டர்கள் தக்கபடி சிக்ஷிக்கப்படுவாராம்.

புதுப்பணம் படைத்தார் கொடுமை புவியிலதிகப்பட்டுவிட்டதாம்.

காசாசை பிடித்தவர் ஒருவருடன் நேசராயிருப்பது கூடாதாம்.

இரத்தவெறி சுரத்துப் பெருகலாவது சுபாவமாம்.

நம்பிக்கைத்துரோகம் நாடோறுமதிகப்பட்டு வருகின்றதாம்.

அகங்காரம் அழிவுக்குக்காரணமாம்.

விதியை வெல்லப் பிரமாவாலு மியலாதாம்.

திலத்தோட்டத்தை இருந்தபடியே இருக்கச்செய்யின் கௌரவ இராமநாதத்துரையவர்களின் கீர்த்தி எளியவர்களுள்ளும் என்றுமழியாததாயிருக்குமாம்.

நகரசங்கத்தில் ஊரவர்களுக்குப் பெருநன்மை செய்யப்படுமாம்.

பொய்சொல்லிப் பிழைக்கும் புல்லர் புவியிலதிகப்பட்டுவிட்டனராம்.

## FOREIGN NEWS.
## பிறதேச வர்த்தமானம்.

### வங்காளம் தேசாதிபதி.

வங்காளத்துக்கு சேர் கிர்ஷ்ணகுப்தா அவர்கள் தேசாதிபதியாய் நியமிக்கப்படுவார்களென்பதாய் வதந்தியுலாவுகின்றது, சக்கிரவர்த்தியவர்கள் சொல்லும்வரை இதை நிச்சயமாய்க் கொள்ளக்கூடாமலிருக்கின்றது காரியபாகங்கள் அவரின் நியமனம் உண்மையாமென்பதைக் காட்டுகின்றன. உத்தியோகத்தர்கள் திருப்தியற்றவர்களா யிருக்கிறார்கள்,

### தேக வியோகம்.

கௌரவ மிஸ்டர் கிர்ஷ்ணசுவாமி ஐயரவர்கள் சென்றமீ 28௳ தேகவியோகமானார்கள். இவர்கள் சென்னை மந்திராலோசனைச்சங்கத்திலொருவரா யிருந்தார்கள், இவர் மரணம் சென்னை அரசாங்க காஸெட் பத்திரிகையா லறிக்கையிடப்பட்டது. பதினைந்து மரியாதை வேட்டுகள் கோட்டையிலிருந்து சுடப்பட்டன, இவரின் மரண் துக்கம் ஜனவரி மாதம் 3-ந்௳வரை பொதுவாகக் கொள்ளப்படவேண்டு மென்பதாய் அரசாங்க கட்டளை பிறந்தது.

### திருவனந்தபுரம் மகாராஜா.

இம்மகாராஜா இம்மாதம் 16-ந்தேதி டில்லியை விட்டுப் பிரயாணமாயினர். 26-ந்தேதி சென்னைக்கு வருவார். 29-ந்தேதி திருவனந்தபுரஞ் செல்வார்.

### தேச விர்த்தி.

ஜப்பான் சக்கிரவர்த்தியார் ஒரு தேசத்தின் விர்த்தியைக் கணிப்பதற்கு அத்தேசத்தின் பொதுஜனக்கல்வியே அறிகுறியாவென்று கூறியிருக்கின்றனர்.

### மூன்று பிள்ளைகள் பெற்றாள்.

தஞ்சாவூரைச் சேர்ந்த கோமங்கலத்திலுள்ள ஒரு ஸ்திரீ மூன்று பிள்ளைகளை ஒரேபிரசவத்தில் பெற்றனள், அவற்றுள் இரண்டு ஆண். ஒன்று பெண்.

### பாரோடா மகாராஜா.

இவர் டில்லி தர்பார் தினத்தன்று நமது மகாராஜா சக்கிரவர்த்தியவர்களை வணங்கியபோது வழக்கத்திற்கு விரோதமாக நடந்துகொண்டாரென்று ஆங்கிலேயப் பத்திரிகைகளுள் சில அவர்மீது குறைகூறி எழுதுகின்றன. ஒன்வறப் பலவாறவும் விபரிப்படுத்திக் காட்டுகின்றன. பரோடா மகாராஜா அவர்கள் தாம் செய்தது தப்பிதமென்று ஒரு மன்னிப்புக்கடிதமும் எழுதியிருக்கின்றார்,

### டில்லி மாநகர்.

இந்நகரை இந்தியாவின் பிரதான நகரமாக்குதற்கு 6 கோடி ரூபாய் வேண்டுமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இதனால் இந்தியாவிற்கு 6 கோடி ரூபா நஷ்டமாம். வங்காளப் பிரிவினையின் மாற்றத்தால் சந்தோஷமும், இந்தியாவின் பிரதான நகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டதால் வியசனமும் வங்காளியருக்குண்டாயின.

### இராஜ சக்கிரவர்த்தியும் சக்கிவர்த்தினியும்.

இராஜ சக்கிரவர்த்தினியவர்கள் அஜ்மீரிலிருந்து புண்டிக்குப் போகும் வழியில் டியோலிக்குப் போனார்கள். அங்கு இராசாங்க ஏஜண்டாகும் மேஜர் பீகொக்கால் வரவேற்கப்பட்டு அவர் ஸ்தானத்தில் சிற்றுணருந்தினார்கள்.

புண்டி இராஜியத்தில் அவர்களை மஸாராயோ இராஜா வரவேற்று இராஜ மாளிகைக்கழைத்துச் சென்றார்கள். சக்கிரவர்த்தினியவர்கள் புண்டியிலுள்ள இராஜமாளிகையையும், கோட்டையையும் மற்றும் பிரதானவிடங்களையும் பார்வையிட்ட பின்னர் மோட்டர் வண்டி மார்க்கமாய் கொட்டாவுக்குப் போனார்கள்.

கொட்டா மகாராஜாவும் பொலிட்டிக்கல் ஏஜண்டாகும் கேர்ணல் பேர்க்கினியும் படைஞருடன் எல்லைக்கு வந்து இராஜ சக்கிரவர்த்தினியவர்களை வரவேற்று, பொலிட்டிக்கல் ஏஜண்டு ஸ்தானத்துக்கழைத்துச் சென்றார்கள். இராஜமாளிகையில் அன்று பின்னேரம் தேவாராதனைக்காய் சக்கிரவர்த்தினியவர்கள் போயிருந்தார்கள்.

இராஜ சக்கிரவர்த்தியவர்கள் கஸராக் கூடாரத்தில் வந்து சேர்ந்து அங்கு தேவாராதனைக்குப் போயிருந்தார்கள். அங்கு போனபொழுது அவர்கள் பரிவாரத்தவர் சமேதராய்ப் போனார்கள்.

இராஜசக்கிரவர்த்தி யவர்கள் நேபாளத்திலாடிய வேட்டையைக் குறித்து மிகச் சந்தோஷமடைந்தார்கள். அனேக மிருகங்களைச் சுட்டுக்கொன்றார்கள். அங்கு நடந்தவை வெளிப்படுத்தப்படவில்லை.

சென்ற26௳ செவ்வாய்க்கிழமை மஹாராயோவின் ஆஞ்ஞையின்கீழ் கொட்டாப்பட்டாளத்தவரால் இராஜ சக்கிரவர்த்தினியவர்கள் வரவேற்கப் பெற்றார்கள்.

மகாராயே சக்கிரவர்த்தி யவர்களை யழைத்துச்சென்று அப்ஹொராவைக் காட்டினார்கள். அன்று பினனேரம் சக்கிரவர்த்தினியவர்கள் ஒரு விருந்தளித்தார்கள். இரவு தீபாலங்காரத்தைப் பார்த்தார்கள். அதன்பின்னர் யானைகள், குதிரைகள், ஆபரணங்கள் முதலியவைகளைப் பார்வையிட்டார்கள்.

சென்ற 31௳கோயில் தேவாராதனைக்காய்ப்போவார்களென்றுசொல்லப்பட்டது.

சென்ற 22ந்தேதி வெள்ளிக்கிழமை இராஜ சக்கிரபர்த்தினியவர்கள் அஜ்மீரிலிருந்து புஷக்காருக்குப் போனார்கள். பின்னேரம் அஜ்மீர் பட்டணத்தைச் சுற்றிப்பார்த்தார்கள். அஜ்மீரிலிருந்து புண்டிக்கு சென்ற 23-ந்தேதி சனிக்கிழமை மோட்டர் வண்டி மார்க்கமாய்ப் போனார்கள்.

நமது தேசாதிபதி மாக்கலம் அவர்கள் அக்கிறாவிலிருந்து வருகையில் லக்னோவையும் காசியையும் பார்த்துவிட்டு சென்ற 26-ந்தேதி கல்கத்தாவுக்கு வந்தார்கள்.

சென்ற 1ந்தேதி பிரசித்த விளம்பரப் படைப்பயிற்சி நடத்தப்படும். இராசாங்க விருந்துமளிக்கப்பட்டது,

சென்ற 2-ந்தேதி படைப்பயிற்சி பரிசோதிக்கப்பட்டது. தோட்டக்கச்சேரி நடத்தப்பட்டது. இரவு பேட்டி நடைபெற்றது.

சென்ற 3ந்தேதி சூழ் வெளிச்சத் தட்டு விளையாட்டு நடத்தப்பட்டது.

சென்ற 4ந்தேதி குதிரைக்காட்சி நடத்தப்பட்டது. இரவு இராஜசபைக்கூட்டம் நடைபெற்றது.

சென்ற 5ந்தேதி வேஷ வேடிக்கைகள் காட்டப்பட்டது.

சென்ற 6-ந்தேதி தீபாலங்காரம் எங்குஞ் செய்யப்பட்டது.

நாளை 8-ந்தேதி பிறின்செப்ஸ்காத்திலிருந்து இராஜதம்பதிகளும் பரிவாரத்தவரும் பம்பாய்க்குப் பிரயாணமாவார்கள்.

பாம்பின் மாமிசம்.

பாம்பின் மாமிசமுண்டால் வெண்குட்டம் நீங்குமாம். ஆயுள் விர்த்தியாகுமாம்.

சர்க்கரையின் தீயகுணங்கள்.

சர்க்கரையையும் சர்க்கரை சேர்ந்த பணியாரங்களையும் அதிகமாக உபயோகிக்கிறவர்கட்கு மதுமேகமுண்டாவதுடன் சீக்கிரமாகப் பற்கள் விழுந்துவிடுமாம். குழந்தைகட்கு மாந்தமுண்டாம், வயிற்றிற் சிறு பூச்சிகளுண்டாம். பற்பல வியாதிகளுண்டாம்.

சைவ சித்தாந்த மகாசமாஜம்.

இதன் ஆறாவது வருட மகாஜனக்கூட்டம் டிசம்பர் மீ 27, 28, 29-ம் தேதிகளில் ஸ்ரீமான். T. பொன்னம்பலம்பிள்ளை M. R. A. S. (Retirod Excise Commissioner. Travancore) அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் விக்டோரியா பப்ளிக் ஹால் என்னும் சென்னைமாநகர சபா மண்டபத்தில் நடைபெற்றது.

விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

சென்னை ராஜதானி ஜெயில்களிலிருக்கும் கைதிகளுள் பலர் விடுதலை செய்யப்பட்டார்கள். சென்னை பெனிடன் ஷெரியிலிருந்து 10 ஸ்திரீ கைதிகளும், 161 ஆண்கைதிகளும் விடுதலை செய்யப்பெற்றார்கள். பகல் 12 மணிக்கு விருந்து மண்டபத்தில் ராஜ விளம்பரம் படித்தபோது ஆனரபில் மிஸ்டர் அட்கின்ஸன், இந்த ராஜதானி ஜெயில்களிலிருந்து இன்று 1537 ஆண் கைதிகளும் 111 பெண் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டார்களென்றும், 6168 ஆண் கைதிகளுக்கும் 58 பெண் கைதிகளுக்கும் தண்டனை குறைக்கப்பட்டதென்றும், 70 சிவில் கடன்காரர்கள் விடப்பட்டார்களென்றும், இவர்கள் கொடுக்க வேண்டிய மொத்தக் கடன் 4758 ரூபாயைக் கவர்ன்மெண்டார் கொடுப்பார்களென்றும் தெரிவித்தார். மேலும், அவர் இந்த ராஜதானியில் பட்டம்பெற்ற பேர்களைச் சொல்லி சர்டிபிகட் பெறுதவர்களுக்குச் சர்டிபிகட்டுகள் கொடுத்தார்கள்.

கூலியாட்களின் கலகம்,

கிரேட்பிரிட்டனிலுள்ள டண்டீயில் நிலக்கரி முதலியன கிடைக்காமை பற்றித் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டன. 20000 கூலியாட்கள் வேலைக்குப் போகாது கலகம் விளைத்துத் தெருக்களில் இறுமாப்பாகத் திரிகிறார்கள். 21-ந்தேதி ஸ்காத்லாந்திலும் வேல்ஸிலுமுள்ள நிலக்கரிச்சுரங்கங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகையில் வேலை நடவாதவாறு கலகம் விளையுமோவென்று அங்குள்ளாரஞ்சுகின்றார்கள். லங்காஷயரில் கலகஞ் செய்யவாரம்பித்துவிட்டார்கள். லக்ஷம் கூலிக்காரர்கள் கலகஞ் விளைப்பார்களென்று கருதப்படுகின்றது.

கவர்னரின் வருகை.

சென்னைக் கவர்னரவர்கள் தமது மனைவியுடனும் பரிவாரங்களுடனும் டில்லியினின்றும் இம்மாதம் 21உ காலை 7-30 மணிக்கு ஸ்பெஷல் மெயிலில் வந்திறங்கினார்.


## தமிழ் நாவல்கள்'
## கதைகள். நாடகங்கள்.

| | ரூ.-அ. | | ரூ.-அ. |
|---|---|---|---|
| ஞானம்பாள் | 0- 6 | மாலிகாபூஷணி | 0-10 |
| சுகதேவி | 0- 8 | லீலா | 0-12 |
| விஜயலக்ஷ்மி | 0-10 | ஆனந்தசுந்தரி | 0-12 |
| கல்யாணி | 0- 8 | சுந்தரன் | 0-12 |
| வேதவல்லி | 0- 4 | கண்மணி | 0- 3 |
| அற்புதராமாயணம் | 10 | சின்னத்தம்பி | 0- 4 |
| புத்திமானே பலவான் | 0- 6 | சிந்தாமணி | 0- 5 |
| வநஜாக்ஷி | 0- 8 | காந்தாமணி | 0- 6 |
| மனோரஞ்சிதம் | 1- [illegible] | மஹீசுதா | 0- 8 |
| துர்கேசநந்தினி | 1- [illegible] | விக்ரமோர்வசியம் | - 8 |
| அனுமான்சிங் | 0-12 | பானுமதிநாடகம் | 0-12 |
| காமாக்ஷி | 0- 8 | தாருகாசுவம் | 0-14 |
| சந்திரசேகரன் | 0- 8 | ரத்னவிமானம் | 0-14 |
| ஆனந்தமடம் | 0- 8 | மிருக திருஷ்ணிகா | 0- 6 |
| சீதாராமர் | 1- 0 | சந்திரகாந்தா | 0-12 |
| சுசிலா | 1- 0 | மோகனசுந்திரம் | 0-12 |
| லக்ஷ்மி | 0- 8 | மாயாவதி | 0- 8 |
| ஜடாவல்லபர் 3 பாகமும் | 1-8 | மங்களாம்பாள் | 0- 8 |
| வியாஸ பிரகாசிகை | 0- 8 | ஜெயத்ஸேனு | 0- 8 |
| கன்னி முத்தம் | 0-12 | பிரபோத சந்திரோதயம் | 0-10 |
| பத்மலோசனி | 0-12 | கிருஷ்ணவேணி | 0-12 |
| சாரதாம்பாள் | 0- 8 | மரகதமணி | 1- 0 |
| பத்மாவதி 2 பாகமும் | 1- [illegible] | பிரேமகலாவதியம் | .12 |
| வத்ஸலா | 0- 8 | கமலாபாய் | 0- 2 |
| | | சாரதானந்தர் | 0- 4 |
| | | சந்திரகாந்தா | 0- 8 |

ஷை புத்தகங்கள் வாங்கப் பிரியமுள்ளவர்கள் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். வீ. பி. மூலமாயனுப்பப்படும். தபாற்செலவு முதலியவை பிரத்தியேகம்.

ராஜ சாஸ்திரியார்.
ஸ்ரீ வித்யா புஸ்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை



## நமது விலாசம்.

க. சச்சிதானந்த நமசிவாய, பத்திராதிபர், விஜயபானு, 14ம் நம்பர் ஆண்டிவால்வீதி, கொழும்பு.

## NOTICE.

All communications and remittances to this Paper should be forwarded to C. Satchidananda Namasivaya, Editor, Wijaya Bhanoo, No. 14, Andival Street, Colombo.


## அறிவித்தல்.

—:o:—

தர்ம சங்கம்.

இச்சசங்கம் 1910-ம் வருஷம் பெப்ரவரி மீ ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தால் அநாதர்களுக்கு வைத்திய சகாயமும், வாரம் மும்முறை அன்னதானமும் செய்யப்படுகின்றன. அன்னதானம் வைத்தியசகாயம் ஆகியவைகளை விரும்பும் ஜீவகாருண்ணிய புண்ணியசீலரை இச்சங்கத்துககுத் தம்மாலியன்ற பொருளுதவி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
கொழும்பு (4) இ. ஸ்ரீநிவாசன்.
3கி. ஆண்டிவால்வீதி | மனேஜர் த.ச.


# JOSEPH & Co.
# TILES.

BEST PORTLAND CEMENT
SPECIALLY MANUFACTURED FOR JOSEPH & CO. CEYLON
TRADE MARK
COLOMBO JAFFNA
TILE BRAND

திறமான பலவித
## சிமந்துகள்
## கூரை ஓடுகள்.

நமது கொம்பனிக்காய்ச் செய்யப்பட்ட திறமான போர்ட்லான்ட் சிமந்தும், பலவிதமான தட்டை ஓடுகளும். முகட்டோடுகளும், நிலத்தில் பதிக்கும் ஓடுகளும், அரை ஓடுகளும், காற்றுவரும் ஓடுகளும், வெளிச்ச ஓடுகளும், அரைவட்டக் கண்ணாடி ஓடுகளும், சுதேச ஓடுகள் மாதிரியானவைகளும், சிறு தூண்களும். கடுதாசிப் பாரங்களும், கூசாக்களும், சகாய விலையுள்ள பார் வைக்கழகான திறம் சுவர் பிருக் கட்டுகளும், வேலியடைக்கும் பலவித முள்கம்பிகளும், பலவித தீந்தைகளும் நம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன.

வேண்டியவர்கள் றெயில்வேக் கொந்திறாத்துக்காரரும் இந்திய சாமான்களிறக்குமதி ஏஜண்டுகளுமாகிய நம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரியமுள்ளவர்கள் வந்து பார்க்கலாம்.

ஜோசெவ் அன்ட் கொம்பனி.
JOSEPH & Co.
79, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு.

தந்தி விலாசம்:
தில்பத், கொழும்பு.
தெலிபோண் நம்பர் 619.
கிளை ஆபீசு யாழ்ப்பாணம்.


## அசாதி ரோகங்களுக்குப்
பிரதிக்ஷை அவுஷதம்.

கஸ்தூரி திராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒரு நேரத்துக்கு மூன்று சொட்டு விதம் ஒரு ஓயின் கிளாஸ் தண்ணீரில் விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்போது சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீரிழிவினால் தாங்க முடியாத வருத்தத்தை மூன்று நாளையில் சுகமாக்கும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருண வயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு, துர் நடத்தையால் ஆண்மை பலமற்றுச் சையோகம் செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில் பூச துஜ்ஜிபங்க தைலமும் எடுத்து உபயோகிக்கவேண்டியது இன்னும் மேற்படி திராவகமானது இருமல் மூலச்சூடு, காசரோகம், அதிகநாட்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளை பலவீனம், ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம், இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், வேறு மூலிவகைகளும் சேர்த்துத் திராவகம் வடித்துவைத்திருக்கிறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால் இது சீக்கிரம் சுகமளிக்குமென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொண்டு அனேக பிணியாளிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்துக்காகச் சொற்ப செலவெடுக்க வெளியே பிரசித்தம்பண்ணிவருகிறேன். பித்தபாண்டு, மகோதரம், காய்ச்சல் கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்களுக்குக் கைகண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூபா 10. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

துஜ்ஜிபங்க தைலம்.

சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தைத் தம் கையால் பழுதாக்கிக்கொள்வதால் சிலநாளைக்குப்பின் நரம்புகள் பழுதுபட்டு ஆணுடம்பு பெலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரீ சையோகத்தால் அனேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டுப் பெலனற்றுப் போகின்றார்கள். இவ்விருவரும சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆணுடம்பில் பூசி உள்ளுக்குக் கஸ்தூரி திராவகமும சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்கு வந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 44 தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21 நாள் தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகம் தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூபா 2. அணா 8. தபாற் செலவு பிரத்தியேகம்.

வீரியஸ்தம்பனக் குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரேகுளிகையில் தெரியும். இந்தக் குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்ப கிரயத்துக்கு விற்பனை செய்து வருகிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு ஏமாந்துபோகிறார்கள். ஆனால் சாஸ்திரப்படி அதிக பொருள் செலவழித்துச்செய்கிறவர்களிடம் பெறப் பின்னடைகிறார்கள். இது உலகஇயல்பே. இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதன் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒரு குளிகையாற் சுகமறியலாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை. 12 குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை யனுபவிப்பார்கள். 12 குளிகைகளின் விலை ரூபா 2. தபாற்செலவு அணா நாலு.

சாப்பிடும் விதம்—சையோகஞ் செய்ய அரைமணித்தியாலத்துக்குமுன் ஒரு மாத்திரையைச் சாப்பிட்டவுடன் காச்சிய பசுப்பாலில் கற்கண்டுபோட்டுக் குடித்தால் இந்திரியம் இளகாது. இளகவேணுமானால் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்.

காம விலாச லேகியம் அல்லது
சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அனேகபிரபுக்களுக்குச் செய்துகொடுத்து பல வியாதிகளைக் குணப்படுத்தியதால், அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை என் விளம்பரத்தில் லோகநன்மைக்காக பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மைசுகம் முதலிவைகளை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்பொழுது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாமஸ்தகா, பீதாரு, காலாமுஸ்லி, சப்பேதுமுஸ்லி, பில்தாஸ், சார்ப்பருப்பு, [illegible], [illegible], நீர்முள்ளி விதை, [illegible], [illegible]பஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தச் செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நீரிழிவு, வெள்ளை, நீர்மாறு அல்லது சுண்ணும் புகைத்ததுபோல் வெள்ளையாய்ப் போகுதல், நீர்க்கடுப்பு, நீர் அடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் அண்டவாய்வு, இருமல், காசம், பித்தகாமலை, பித்தபாண்டு, பீனிசம். கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலவாய்வு, இன்னும் அனேக கடினமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால், சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும்பலநோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியையும் பலத்தையும் தரும். பாலை விர்த்திசெய்யும்.

சிலர் சூரணம் லேகியங்களால் சகல நோயும் தீர்ந்து 80 வயதுள்ள முதியோரை யௌவனர்களாக்குமென்றும், சந்தானமில்லாத ஸ்திரீகள் கர்ப்பணியாவார்களென்றும் பலவாறு வீணான காரியங்களைப் பிதற்றித் திரிகிறார்கள். அவ்விதம் பிதற்றவும் பொய் சொல்லவும் என் மனச்சாட்சி இடங்கொடுக்கிறதில்லை. ஆனால் கர்ப்பந்தரிப்பதற்குத்தகுந்த அவுஷதம் என்னிடமுண்டு. இஷ்டமுள்ளவர்கள், ஆதியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளின் தேககுணத்தைத் தெரிவித்து ஔஷதத்திற்கு வேண்டிய பணமும் செலவழிப்பார்களாகில் நான் ஔஷதப்பிரயோகம் செய்யக்கூடும். இதைப் புருஷர்கள் பெரிய களச்சிக்காய்ப் பிரமாணமும் ஸ்திரீகள் சிறிய களச்சிக்காய்ப் பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு 21 நாளும் பழைய வியாதிகளுக்கு 44 நாளும் அந்தந்த வியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படும் அனுமானத்துடன் சாப்பிட வேண்டும். விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. கால் இருத்தலுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு 40 நாளைக்கு ஒரு இருத்தல் போதுமானது. ஸ்திரீகளுக்கு முக்கால் இருத்தல். இது சாப்பிடுவதற்கு வெகு இன்பமும் மணமுமாயிருக்கும் இதில் லாகிரியே கிடையாது. எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின் விபரத்தைக் கடிதமுலியமாய்த் தெரிவித்து அத்துடன் 8 அணா ஸ்டாம்பும் அனுப்பவேண்டியது அல்லாவிட்டால் லேகிய மனுப்பப்பட மாட்டாது.

இந்த லேகியத்தில் விலையுயர்ந்த பஸ்பங்கள் சேர்ந்திருப்பதினாலேயே இதன் விலை அதிகமாகிறது. நல்ல பொருளுக்கு விலையதிகமென்பது யாவருமறிந்த உண்மையே. இந்த லேகியம் வைத்தியசாஸ்திரத்தில் கூறப்பட்ட பிரகாரம் அற்ப தவறுமின்றிச்செய்யப்பட்டது. கடையின் பசையான சரக்கைக் கொண்டு செய்த லேகியமானால் ருத்தல் ரூ. 4-க்குக் கொடுக்கக்கூடும். அதனால் ரோகங்கள் முற்றும் மாறமாட்டாது.

மேற்காட்டிய நம்முடைய இரசமணி சாலாமிஸ்ரிச் சூரணம் சாலாமிஸ்ரி லேகியம் இவை முதலிய அநேக ஔஷதங்கள் அதிகமாய் விற்பனையாவதைக் கண்ட சிலர் அதற்காகப் பொறாமைகொண்டு வைத்தியரென்று வெறுநாமம் பூண்டு சாலாமிஸ்ரி அல்வா சாலாமிஸ்ரிச்சூரணம் இரசமணி முதலிய இன்னும்சில அவுஷதங்களை விற்க வெளிவந்திருக்கிறதாக நமக்குத் தெரியவருகிறது.

அது "கானமயிலாடக் கண்டிருந்தவான்கோழி, தானு மதுவாகப் பாவித்த" வண்ணமாயிருப்பது உண்மை. சாலாமிஸ்ரி வியாபாரம் செய்துகொண்டு திரிந்த சிலர் இது சகல ரோகங்களையும் கண்டிக்கக் கூடிய கஸ்தூரிக்கு மேலான வஸ்துவென்று சொல்லிக்கொண்டிருந்து இதைச் சூரணமாயாவது லேகியமாயாவது செய்து விற்கும் இப்போது இத்துடன் கஸ்தூரி அம்பர் சேர்த்துச் செய்திருப்பதாய்ச் சொல்கிறார்கள். அப்படியானல் முன் விற்றுக்கொண்டிருந்த சாலாமிஸ்ரியின் குணமும் சத்தும் இப்பொழுது குறைந்துபோயிருக்கிறதோ? அவர்கள் முன் கூறியதோ அல்லது இப்பொழுது கூறுவதோ எது உண்மையென்றும் அவ்வித மருந்தின் பலிதத்தையும் நீங்களே யறிந்துகொள்ளலாம்.

கெங்காதார் தைலம்.

அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து. இதன்விலை அவுன்ஸ் 5 ரூபா.


Printed and Published by;
C. Satchidananda Namasivaya,
at the Meenambal Press.
19, Kew Road, Slave Island, Colombo.